# உதயநிதி ஸ்டாலின் பேச்சைக் கேட்டால் ஓட்டம்! எடப்பாடி பழனிசாமி பேச்சு மட்டும் இனிக்கிறதா?

காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது சட்டப்பேரவையில் நடந்த நிகழ்வுகள், த.வெ.க. அரசு தி.மு.க.வைக் கண்டு - முக்கியமாக எதிர்க்கட்சித் தலைவரான உதயநிதி ஸ்டாலினைக் கண்டு - எந்த அளவுக்குப் பதற்றத்திலும் அச்சத்திலும் இருக்கிறது என்பதற்குத் தெளிவான சான்றுகளாக அமைந்தன.

உதயநிதி ஸ்டாலின் இந்த அரசின் நான்கு மாத ஆட்சியில் நிலவும் சட்ட ஒழுங்கு சீர்கேடுகளைப் பட்டியலிட்டு, "இதற்கு முதலமைச்சர் திசைதிருப்பாமல், தர்க்கமற்ற குட்டிக்கதைகள் சொல்லாமல், மூன்று நாட்கள் நன்றாகத் தயார் செய்து கொண்டு வந்து பேசலாம்" என்று கூறினார். இதுதான் த.வெ.க. அமைச்சர்களைப் பதற்றமடையச் செய்தது. உதயநிதி தன் பேச்சின் தொடக்கத்திலேயே "இதைத் தானே செய்யப்போகிறீர்கள்?" என அவர்களை 'லாக்' செய்துவிட்டார். தங்களின் ஒரே ஆயுதத்தையும் பிடுங்கப் பார்க்கிறாரே என்ற அச்சத்தில், அந்த ஆயுதத்தையே தூக்கிக் கொண்டு அவர்கள் விதண்டாவாதத்தில் இறங்கினார்கள்.

உதயநிதி எழுப்பிய வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டியவர் காவல்துறையைத் தன் வசம் வைத்துள்ள முதலமைச்சர். "திங்கள்கிழமை முதலமைச்சர் பதிலளிப்பார்" எனச் சபாநாயகர் தெளி வாகக் கூறிவிட்டார். அப்படியிருக்க, முதலமைச்சரை நோக்கி எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு வழக்கமாகப் பேசும் அமைச்சர்கள் ஏன் குறுக்கிட்டுப் பேச வேண்டும்?

**"கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள்தான் பதிலளிக்க வேண்டும்" என்ற தன் சொந்த அறிவுறுத்தலையே மீறி, சபாநாயகர் ஏன் திரும்பத் திரும்ப ஆதவ் அர்ஜூனா, ராஜ்மோகன், நிர்மல் குமார் ஆகியோரை அனைத்துக் கட்டங்களிலும் குறுக்கிட அனுமதிக்கிறார்?**


**காரணம் பயம். உதயநிதி எழுப்பிய ஆழமான கேள்விகளும், தமிழ்நாட்டிற்கே காதுகுத்தி வரும் 'தாய்மாமன் அரசு' அடைந்திருக்கும் தோல்விகளை அம்பலப்படுத்துவதும் மக்கள் மனதில் பதிந்து விடக் கூடாது என்பதற்காகவே தனிநபர் தாக்குதல்களும் திசைதிருப்பும் நாடகங்களும் அரங்கேற்றப்படுகின்றன.**

உதயநிதி எழுப்பிய வினாக்களுக்குப் பதிலளிக்காமல், அண்ணா பல்கலைக் கழக மாணவி விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு வந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட பிறகு, சட்டப்பேரவையில் அதை ஓர் அமைச்சர் எழுப்புகிறார் என்றால் இவர்களிடம் எந்தக் கேள்விக்கும் பதிலில்லை என்றுதானே பொருள்? எதிர்க்கட்சிகள் யாரும் கேள்வி எழுப்பிவிடக் கூடாது என்பதற்காகவே கொள்கை விளக்கக் குறிப்புகள் படிக்க அவகாசம் இன்றி, சட்டப்பேரவை கூடுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பே தரப்படுகின்றன. எதிர்க்கட்சிகள் பேசத் தொடங்கியதும் அமைச்சர்களின் பொய்களும் பித்தலாட்ட விதண்டாவாதங்களும் தொடர்கின்றன. அமைச்சர்கள் தினமும் சட்டப்பேரவையை தி.மு.க. மீது அவதூறு பரப்புவது என்ற ஒற்றை நோக்கத்திற்காக 'ஹைஜாக்' செய்கிறார்கள். வேறு எந்த மக்கள் பிரச்சினையும் விவாதிக்கப்படுவதில்லை.

### முதலமைச்சர் ஏன் அவையை விட்டு வெளியேறினார்?

உதயநிதி ஸ்டாலின் ஆணித்தரமாக வைத்த குற்றச்சாட்டுகளும் கேள்விகளும் முதலமைச்சரை அமைதியிழக்கச் செய்தன. தனக்காக எப்போதும் பேசும் அமைச்சர்களை வைத்துச் சூழ்நிலையைச் சமாளிக்கப் பார்த்தார். ஆனால் அமைச்சர்களின் திசைதிருப்பும் விதண்டாவாதங்களுக்கு உதயநிதி உடனுக்குடன் பதிலளித்தார். அத்தோடு அவர் தன் கேள்விகளுக்கு முதலமைச்சர் வீட்டிற்குப் போய் நன்றாக 'பிரிப்பேர்' செய்து கொண்டு வந்து பதிலளிக்கட்டும் என்று கூறியபோது, அந்த 'பிரிப்பேர்' என்ற வார்த்தை சபாநாயகரைப் புண்படுத்திவிட்டது போலும்!

ஏனெனில் விஜய், 'ஸ்க்ரிப்ட்' இல்லாமல் எதுவும் பேசமாட்டார் என்பது அனைவரும் அறிந்த ரகசியம். அது சமூக வலைத்தளங்களிலும் கேலிப்பொருளாக மாறியிருக்கிறது. அதைத்தான் உதயநிதி கிண்டலாகக் குறிப்பிடுகிறார் என நினைத்த சபாநாயகர், முதலமைச்சருக்கு உதவுவதாக நினைத்து 'same side goal' ஒன்றைப் போட்டார். "அப்படியெல்லாம் இல்லை, முதலமைச்சர் எப்போது வேண்டுமானாலும் பதிலளிக்கத் தயாராகத்தான் இருக்கிறார்" என்று சபாநாயகர் கூற, அதற்கு உதயநிதி, "அப்படியென்றால் இப்போதே பதிலளிக்கலாமே?" என்று கிடுக்கிப்பிடி போட்டார். **அது விஜய் அதன் அரசியல் வாழ்வில் சந்தித்த மிகப்பெரிய நெருக்கடியாக மாறியது. உடனடியாக பதிலளிக்க அவர் என்ன உதயநிதியா?**



**மனுஷ்ய புத்திரன்**
மாநில ஆலோசகர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

எங்கே சபாநாயகர் "இப்போது முதலமைச்சர் பதிலளிப்பார்" என்று சொல்லிவிடுவாரோ என அஞ்சியோ என்னவோ, "நான் திங்கள்கிழமை பதிலளிக்கிறேன், அப்போது யாரும் ஓடிடாதீங்க" என்று சொல்லிவிட்டு அவையை விட்டு வேகமாக வெளியேறினார் முதலமைச்சர். "மற்றவர்களை ஓடாதீங்க என்று சொல்லிவிட்டு இப்போது முதலமைச்சர் ஏன் ஓடுகிறார்?" என உதயநிதி உடனே கேள்வி எழுப்பினார்.

**கரூரில் தொடங்கிய ஓட்டம், டெல்லியில் செய்தியாளர்களைக் கண்டு ஓட்டம் எனத் தொடர்ந்து, இப்போது சட்டப்பேரவை வரை வந்துவிட்டது. அவரால் நெருக்கடிகளை எதிர்கொள்ள முடிவதில்லை; எதற்கும் உடனடியாகச் செயல்படவோ பதிலளிக்கவோ முடிவதில்லை. நேரடி வினாக்கள் அவரைப் பதற்றமடையச் செய்கின்றன. அரசியல் என்பது அவருக்கு எப்போதும் ஒரு 'safe and comfort zone' ஆக இருக்க வேண்டும் என நினைக்கிறார்.**

மானியக் கோரிக்கைகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள் அதிகாரிகளால் தயார் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் ஏற்கனவே முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கும். கடந்த காலங்களில் முதலமைச்சர்கள் தங்கள் துறை சார்ந்த கேள்விகள் எழுப்பப்படும்போது உடனுக்குடன் பதிலளித்த ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. விரும்பினால் ஒருவர் எப்போது வேண்டுமானாலும் பதிலளிக்கலாம்.

உதயநிதி 'இன்று போய் நாளை வா' என ராமாயண பாணியில் திங்கள்கிழமை தானே பதிலளிக்கச் சொன்னார்? தான் 'கார்னர்' செய்யப்படுவதைத் தாங்க முடியாமல் முதலமைச்சர் அவையைவிட்டே வெளியேறுகிறார். இதுவரை எந்த முதலமைச்சரும் தன் துறை சார்ந்த மானியக் கோரிக்கை விவாதம் நடைபெறும்போது அவையை அவமதித்து வெளியேறியதில்லை.

### எடப்பாடி பழனிசாமி பேசுகையில் ஏன் அமைதி?

பிற்பகலில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி காவல்துறை மானியக் கோரிக்கையில் போதைப் பொருள் விவகாரம், பாலியல் குற்றங்கள், அதிகரித்து வரும் கொலை கொள்ளை என அரசைப் பற்றி ஒரு மணி நேரத்திற்கு மேல் குற்றஞ்சாட்டிப் பேசினார். த.வெ.க. அமைச்சர்கள் வகுப்பறையில் மாணவர்களைப் போல கைகட்டி வாய்பொத்திப் பாடம் கேட்டார்கள்.

உதயநிதியிடம் மூச்சுக்கு முன்னூறு முறை குறுக்கிட்டு, "உங்கள் ஆட்சியில் இப்படி நடக்கவில்லையா?" என்று கேட்டவர்கள், எடப்பாடி பழனிசாமி பேசும்போது கோடநாடு கொலை-கொள்ளை, பொள்ளாச்சி பாலியல் கொடுமைகள், தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு, சாத்தான்குளம் சம்பவம் பற்றியெல்லாம் ஏன் குறுக்கிட்டு எந்தக் கேள்வியும் எழுப்பவில்லை? அவர் பேசி முடிக்கும் வரை த.வெ.க. தரப்பில் ஏன் இந்த மயான அமைதி?

காரணம், த.வெ.க.விற்குக் கூட்டணியில் காங்கிரஸோடு பிரதமர் வேட்பாளர் விவகாரத்தில் மோதல்களும், இடது சாரிக் கட்சிகளோடு இடதுசாரி மாணவர்களைக் கண்காணிப்பது, கம்யூனிஸ்டுகளைக் கணக்கெடுப்பது போன்ற விவகாரங்களில் உரசல்களும் தொடங்கிவிட்டன. இந்தக் கட்சிகளுடனான கூட்டணி முறிந்து விட்டால் அ.தி.மு.க.வின் ஆதரவை நாடலாம் என்பதற்காகத்தான் எடப்பாடி பழனிசாமியிடம் இந்த நல்லெண்ண அமைதியைக் கடைப்பிடிக்கிறார்கள். அ.தி.மு.க.வை உடைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்ததால், 'ஒரிஜினல்' அ.தி.மு.க.விடமே துண்டு போட்டு வைக்கலாம் என்பதுதான் திட்டம். பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் சௌமியா அன்புமணி அரசின் மீது குற்றச்சாட்டுகளை வைக்கும்போது கூட அமைதி காத்து பவ்யமாக அமர்ந்திருக்கிறார்கள்.

**'தி.மு.க. வெறுப்பு' என்ற ஒரே கொள்கை, ஆட்சியைக் காப்பாற்ற யாருடன் வேண்டுமானாலும் கூட்டு வைக்கலாம் என்ற பச்சை சந்தர்ப்பவாதம் - இவை இரண்டைத் தவிர த.வெ.க.விற்கு வேறு எந்தக் கொள்கையும் இல்லை.**

### திங்கள்கிழமை என்ன நடக்கும்?

புதிதாக ஒன்றும் நடக்காது. எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய எந்தக் கேள்விக்கும் பொறுப்பான பதில் வராது. எதிர்த்தாக்குதல்கள், தனிநபர் தாக்குதல்கள், பஞ்ச் டயலாக்குகள், அவதூறுகள் நிரம்பிய ஒரு 'solo performance' மட்டுமே நடக்கும். எதிர்க்கட்சிகள் குறுக்கிடச் சபாநாயகர் அனுமதிக்க மாட்டார். ஒரு பதற்றமான சூழலை உருவாக்கி, எதிர்க்கட்சிகள் வெளியேற வேண்டிய அல்லது வெளியேற்றப்பட வேண்டிய சூழல் உருவாக்கப்படலாம். பிறகு 'ரீல்'க்கான solo performance தொடரும். இதுதான் மோடியின் பாணி. எதிர்க்கட்சிகள் எந்தக் கேள்வி கேட்டாலும் 'உங்கள் ஆட்சிக் காலத்தில் அப்படி நடக்கவில்லையா? சீனா – பாகிஸ்தான் போரில் என்ன நடந்தது தெரியுமா?" என்று பா.ஜ.க. கேட்பதுபோலத்தான் இவர்கள் பதில்கள் அனைத்தும் கடந்த காலத்திலேயே இருக்கின்றன.

**எத்தனை முறைதான் ஒரே நாடகத்தைப் பார்ப்பது?**

**ஸ்கிரிப்ட்டை மாத்துங்க சார்... போரடிக்குது!**

---

### சென்னை உயர்நீதிமன்றத்தில்

# தமிழ்மொழி வழக்காடு மொழியாகிட 2006-ஆம் ஆண்டே முயற்சி எடுத்தது தி.மு.க.!

### சட்டமன்றத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

*சென்னை, செப். 5 -*

*தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ் மொழியை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டும் என்ற தனித் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு தி.மு.க. உறுப்பினர் எஸ்.ரகுபதி பேசியதாவது:-*

*சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டும் என்று கடந்த திமுக ஆட்சியின் போது சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அதனை ஆளுநர் மூலமாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பி, குடியரசு தலைவர் அதனை உச்ச நீதிமன்ற கொலீஜியத்திற்கு அனுப்பி வைத்த போது, அப்பொழுது சட்டத்திருத்தங்கள் எல்லாம் தமிழிலே மொழி பெயர்க்கப்படவில்லை, தரவுகள் எல்லாம் தமிழிலே இல்லை என்ற சில காரணங்களால் அன்றைக்கு தமிழ் மொழி வழக்காடு மொழியாக கொண்டு வருவது தடுக்கப்பட்டதே தவிர மறுக்கப்படவில்லை.*

*இன்று இப்பொழுது இங்கே கொண்டு வந்த தீர்மானத்திற்கு பிள்ளையார் சுழி போட்டது முதன் முதலில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இங்கே பேசிய முதல்வர் அவர்கள் அறிமுக உரையிலே குறிப்பிட்டது என்பது, வழக்கு மன்றத்திலே நடக்கின்ற வழக்குஎவ்வாறு நிலுவையில் உள்ளது என்பதை சாமானியர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பது போன்ற நடைமுறை வர வேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதி அரசர் மாண்புமிகு ரமணா அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அப்போது முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டுமென முன்மொழிந்ததை போல தற்போதைய முதல்வர் முன்மொழிந்துள்ளார்.*



*எனவே எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசாக திராவிட மாடல் அரசை வழிநடத்திச் சென்றவர் முதல்வராக இருந்த திராவிட நாயகர் தளபதி அவர்கள்.*

*அதேபோல் உச்ச நீதிமன்ற கிளை சென்னையில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முதன் முதலில் வைத்தவரும் மு.க ஸ்டாலின் அவர்கள் தான், அதுமட்டுமல்ல தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டுமென மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியிலே பங்கேற்ற உச்ச நீதிமன்ற நீதி அரசர் சந்திர சூட் அவர்களிடம் கோரிக்கையை வைத்தார், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள், மேலும் பாரத பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியதோடு நின்று விடாமல் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி முன்னிலையிலேயே தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டும் என்று தைரியமாக கோரிக்கை வைத்தவர் தான் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதையெல்லாம் ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், தற்பொழுது நீங்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தில் இந்த வரலாறு எல்லாம் இல்லை, அதனால் தான் இங்கு இதனை பதிவு செய்கிறேன், தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர முதன்முதலாக குரல் கொடுத்தது திராவிட இயக்கம், திராவிட மாடல் ஆட்சி என்பதை இங்கே கவனத்தில் கொண்டு வருகிறேன்.*

*ஏனென்றால் மக்கள் தற்பொழுது நேரலையில் இதனை எல்லாம் பார்க்கிறார்கள், அவர்களுக்கு இந்த வரலாறு எல்லாம் தெரிய வேண்டும், தமிழ் மொழியை வழக்காடு மொழியாக கொண்டு வர 2006 ஆம் ஆண்டிலிருந்து இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*தனித் தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம்!*

*ஏனென்றால் இது எங்களுடைய குழந்தை, இதனை வரவேற்பதில் எந்த தவறும் கிடையாது, எங்களுடைய தாய்மொழி தமிழ், அன்னை தமிழ் மொழி எங்கும் ஒலிக்க வேண்டும் என்பதுதான் எங்களது நோக்கமும், அதற்காகத்தான் நாங்கள் சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினோம், தற்பொழுது மூன்றாவது முறையாக நீங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புகிறீர்கள், இது தமிழ்நாட்டு மக்களின் கனவு, நீதிமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை சாதாரண மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் தமிழ் மொழி வழக்காடு மொழியாக வந்து விட்டால் சாதாரண மக்களும் எளிதில் புரிந்து கொள்ள முடியும், இதில் யாருக்கும் மாற்று கருத்து கிடையாது, எனவே தான் சொல்கிறேன் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதன் தொடர்ச்சியாக தமிழ் சட்டக் களஞ்சியம், தமிழ் சட்ட சொற்கள் உள்ளிட்ட அனைத்தும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டால்தான் தமிழ் மொழி வழக்காடு மொழியாக கொண்டு வர முடியும், இங்குள்ள மொழிபெயர்ப்பாளர்கள் அந்தப் பணியை விரைந்து செய்திட அரசு துரிதப்படுத்த வேண்டும்*

*இவ்வாறு அவர் பேசினார்.*

---

### கழக துணைப் பொதுச் செயலாளர் இ.பெரியசாமி சிறப்புரை:

# திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் அறிவிப்பு!

*திண்டுக்கல், செப். 5-*

*திண்டுக்கல் மேற்கு மற்றும் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் குறித்து திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-*

*திண்டுக்கல் வருவாய் மாவட்டத்திற்குட்பட்ட கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (5.9.2026 - சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத் தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையிலும் தலைமைக் கழக பிரதிநிதிகள் செல்வம் எம்.பி. மற்றும் பிரபு கஜேந்திரன் ஆகியோரின் முன்னிலையிலும், திண்டுக்கல், ரவுண்ட் ரோடு, நாயுடு திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*





*அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

**பொருள்:**

*1. சென்னையில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி மாநகர, நகர, ஒன்றிய பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு சம்பந்தமாக.*

*2. செப். - 15, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக முப்பெரும் விழா*

*3. கழக ஆக்கப் பணிகள்.*

*இவ்வாறு அர.சக்கரபாணி, ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் அறிவித்துள்ளனர்.*

---

### வேம்பாரில் மழை வெள்ளத்தால் சேதமடைந்த

# மீன்பிடி இறங்கு தளம் சீரமைப்புப் பணியை துரிதப்படுத்த வேண்டும்!

### சட்டப்பேரவையில் ஜீ.வி.மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

சென்னை, செப்.5 -

வேம்பாரில் மழை வெள்ளத்தால் சேதம் அடைந்த மீன்பிடி இறங்கு தளம் பாலத்தை சீரமைக்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும் என சட்டப்பேரவையில் ஜீ.வி. மார்க்கண்டேயன் கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் நடந்த மானிய கோரிக்கை மீதான கேள்வி நேரத்தில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினரும் விளாத்திகுளம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான ஜீ.வி. மார்க்கண்டேயன் பேசியதாவது:-



விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் வைப்பாறு கடலில் கலக்கின்ற இடத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் மீன்பிடி இறங்கு தளம் 'ப' வடிவ பாலம் முற்றிலும் சேதம் அடைந்ததை கடந்த ஆட்சியில் சட்டமன்றத்தில் நான் எடுத்துக் கூறியதை தொடர்ந்து மீன்பிடி இறங்கு தளம் மற்றும் வடிவ பாலத்தை சீரமைக்க அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூபாய் 10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார். இந்த சீர் அமைப்பு பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டதை தொடர்ந்து கடந்த பிப்ரவரி மாதம் பணி துவங்கிய போதும் தற்போது வரை இப்பணியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. நவம்பர் மாதம் அதிக மழை பெய்தால் கூடுதல் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனால் மேலும் பல கோடிகள் செலவு செய்ய வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும். எனவே மீன் வளத்துறை அமைச்சர் விளாத்திகுளம் தொகுதிக்கு வருகை தந்து நேரடியாக ஆய்வு செய்து இந்த பணியை விரைவாக முடித்து பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.